# நீலகிரியில் மக்கள் நீதிமன்றம் மூலம் 1577 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.5.96 கோடிக்கு தீர்வு

ஊட்டி, மார்ச்.13-

நீலகிரியில் மக்கள் நீதிமன்றம் மூலம் 1577 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.5.96 கோடிக்கு தீர்வு காணப்பட்டது.

**மக்கள் நீதிமன்றம்**

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் படி இந்தியா முழுவதும் ஒவ்வொரு தாலுக்கா மற்றும் மாவட்ட நீதிமன்றங்களில் தேசிய அளவிலான மாபெரும் மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது. நீலகிரி மாவட்ட நீதிபதி சந்திரசேகரன் உத்தரவின்படி ஊட்டி மாவட்ட நீதிமன்ற வளாகத்திலும், ஊட்டி மகளிர் நீதிமன்ற வளாகத்திலும் மற்றும் சார்பு நீதிமன்ற வளாகத்திலும், கூடலூர் கோத்தகிரி, குன்னூர் மற்றும் பந்தலூர் ஆகிய தாலுக்காக்களில் உள்ள நீதிமன்றங்களில் நேற்று மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது. ஊட்டி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்தை நீலகிரி மாவட்ட முதன்மை நீதிபதி சி.சஞ்சய் பாபா துவக்கி வைத்து பேசுகையில், ஊட்டி மற்றும் தாலுக்காக்களில் உள்ள நீதிமன்ற வளாகங்களில் மக்கள் நீதிமன்றம் நேர்ப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளான சொத்து சம்மந்தமான வழக்குகள், வங்கி கடன் சம்மந்தமான வழக்குகள், சிறு குற்ற வழக்குகள் மற்றும் மோட்டார் வாகன நஷ்டஈடு கோரும் வழக்குகள், குடும்ப பிரச்சனை சம்மந்தமான வழக்குகள், காசோலை வழக்குகள், நிலுவையிலுள்ள வழக்குகள், தேசிய வங்கிகளின் வாரா கடன் சம்மந்தமான அனைத்து வகை வழக்குகளும் எடுத்துக் கொள்ளப்பட்டு சமரசம் மூலம் தீர்வு காணப்படவுள்ளதாகவும், மக்கள் நீதிமன்றம் மூலமாக முடிக்கப்படும் வழக்குகளில் முத்திரைத்தாள் வாயிலாக செலுத்திய கட்டணம் திரும்ப கிடைக்குமென்றும் இதனால் நேரம், பண விரயம், மன உளைச்சல் போன்றவைகள் தவிர்க்கப்படுவதாகவும், இதனை வழக்காடிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும் இன்று நடைபெற்ற மக்கள் நீதிமன்றத்திற்கு தலைமையேற்று பல்வேறு வழக்குகளுக்கு சமரசம் செய்துவைத்தார். ஊட்டி நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதிபதி ஆர். ஸ்ரீதரன், நீலகிரி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயலாளரும் சார்பு நீதிபதியுமான பி. ஸ்ரீதர், குற்றவியல் நீதித்துறை நடுவர் பாரதிராஜன், கூடுதல் மகளிர் நீதிமன்ற நீதிபதி பி.முருகேசன் ஆகியோர் நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த பல்வேறு வழக்குகளை எடுத்துக் கொண்டு சமரச தீர்வு கண்டனர்.

மேலும் கோத்தகிரி நீதிமன்றத்தில் உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நீதிபதி பி. ஜெயப்பிரகாஷ், தலைமையில் கோத்தகிரி நீதிமன்ற வளாகத்திலும், குன்னூர் நீதிமன்றத்தில் சார்பு நீதிபதி கே. லிங்கம், தலைமையிலும், குற்றவியல் நீதித்துறை நடுவர் எம். ரமேஷ், மற்றும குற்றவியல் நீதிமன்றம் கே.ஆர்.கலைவாணன், குன்னூர் நீதிமன்ற வளாகத்திலும், கூடலூர் நீதிமன்றத்தில் உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நீதிபதி எஸ்.ஆர். பாபு, மற்றும் பந்தலூர் நீதிமன்றத்தில் கூடுதல் உரிமையியல் நீதிபதி ஈ.பிரகாஷ், தலைமையில் மக்கள் நீதிமன்றம் நேற்று நடைபெற்றது. மேற்படி மக்கள் நீதிமன்றத்தில் வாதிகள், பிரதி வாதிகள் வங்கி மேலாளர்கள், மாவட்ட நீதிமன்ற ஊழியர்கள் அனைவரும் கலந்துக் கொண்டனர். மேலும் நேற்று இம்மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் மக்கள் நீதிமன்றத்தில் வங்கி வாராக் கடன் வழக்குகளில் சுமார் 672 க்கும் மேற்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்டன.

மேற்படி மக்கள் நீதிமன்றத்தில் நீதிமன்றங்களில் நிலுவையிலிருந்த வழக்குகளில் சுமார் 905 வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டது. அதன் மதிப்பு ரூ. 1,59,26,754- வங்கிகளின் வாரா கடன் சம்மந்தமான சுமார் வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் 672 வழக்குகள் தீர்வு காணப்பட்டன. அதன் மதிப்பு ரூ. 4,36,75,610- ஆகும். மொத்தம் 1577 வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் வழக்குகள் முடிக்கப்பட்டன ரூ.5,96,02,364- க்கு தீர்வு காணப்பட்டன.



கோவை மாவட்டம் போளாகானி ஊராட்சியில்

# தேசிய பட்டியலின சமூகத்தினருக்கான ஆணைய துணைத்தலைவர் அருண் ஹால்டர் ஆய்வு



கோவை,மார்ச்.13-

கோயம்புத்தூர் மாவட்டம், குளத்துப்பாளையம் போளாகானி ஊராட்சியில் தேசிய பட்டியலின சமூகத்தினருக்கான ஆணையத்துணைத் தலைவர் அருண் ஹால்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கோயம்புத்தூர் மாவட்டம், குளத்துப்பாளையம் போளாகானி ஊராட்சியில் தேசிய பட்டியலின சமூகத்தினருக்கான ஆணையத் துணைத் தலைவர் அருண்ஹால்டர் இருதரப்பினருக்கிடையே நடைபெற்ற மோதலில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின் போது, கோவை மேற்கு மண்டல காவல்துறை தலைவர் சுதாகர் சமூக நீதி மனிதவள மேலாண்மை காவல் துறை தலைவர் தாமரைகண்ணன் மேற்குமண்டல காவல்துறை துணைத் தலைவர் முத்துசாமி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வ நாகரத்தினம் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.பி.எஸ். லீலா அலெக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் ஆய்வின் போது தேசிய பட்டியலினத்தலைவர்களுக்கான துணைத் தலைவர் இருதரப்பினரிடையே நடைபெற்ற மோதலில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் கருத்துக்களைக் கேட்டுக் கொண்டதுடன் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு ஆறுதல் கூறினார். மேலும் இச்சம்பவத்தினை நேரில் பார்த்தவர்களாக தெரிவிக்கப்பட்டவர்களிடமும், காவல் உயர் அலுவலர்களிடமும் நேரில் தனித்தனியே ஆய்வு மேற்கொண்டதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய அரசு உதவிகள் கிடைத்திட அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆணைய துணைத் தலைவர் அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து கலெக்டர் அலுவலகத்தில் அரசு அலுவலர்கள், பட்டியலின மக்களுக்கான சங்க பிரதிநிதிகள் அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்ட ஆணையத் துணைத் தலைவர், பட்டியலின மக்களுக்கு அரசு வழங்கும் திட்டங்களையும், அவர்களின் உரிமைகளையும் பெறும் வகையில் அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும் எனவும் தேசிய பட்டியலின ஆணையத்தலைவர் அருண் ஹால்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கோவை மாநகராட்சி வளாகத்தில் மரக்கன்றுகளை மேயர் கல்பனா நட்டு வைத்தார். அருகில் துணை மேயர் வெற்றி செல்வன், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனத்தினர் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் உள்ளனர்.

ஊட்டியில்

# ஆசைப்பட்ட காரில் வலம் வர முடியாததால் புதிய காரை உருவாக்கி வலம் வரும் கல்லூரி மாணவர்



ஊட்டி, மார்ச்.13-

ஊட்டி கார் கண்காட்சியில் வைக்கப்பட்ட சிறிய ரக காரில் சுற்றிப் பார்க்க ஆசைப்பட்ட சிறுவன் உரிமையாளர் தர மறுத்ததால் தனது ஆசைப்படி எண்ணத்தில் தோன்றிய சிறிய ரக காரை உருவாக்கி அதனை நகர் முழுவதும் பயணம் செய்து வருகிறார்.

ஊட்டி நகரில் சிறியரக சிகப்பு வண்ணம் கொண்ட காரில் சிறுவன் வலம் வந்து கொண்டிருப்பது பொதுமக்கள் அனைவரும் ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். இருவர் அமர்ந்து செல்லும் வகையில் அதேபோல் பிரதான கார்களில் என்னென்ன அம்சங்கள் உள்ளனவோ அவை அனைத்தும் இந்த சிறிய காரில் உருவாக்கி தனது கனவை நிறைவேற்றியுள்ளார் ரோஷன் என்ற அந்த மாணவர்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஊட்டி பழமையான கார் கண்காட்சி நடைபெற்றது. அதில் பல மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட கார்களின் அணிவகுப்பு இருந்தது. அப்போது அந்தக் கண்காட்சியில் சுற்றிப் பார்க்கச் சென்ற ரோஷன் குடும்பத்தினர் சிறிய ரக காரை கண்டு அதில் பயணம் செய்ய ஆசைப்பட்டு உரிமையாளரிடம் கேட்கவே காரின் உரிமையாளர் முடியாது என நிராகரித்தார். பின்பு அதே போல் காரை ஒன்றை உருவாக்க வேண்டும் என ஊட்டி நகரில் பல பணிமனைகளில் ரோஷன் குடும்பத்தினர் கேட்டு வந்த நிலையில் யாரும் அதைத் தயாரிக்க முன்வரவில்லை. இதையடுத்து ரோஷன் குடும்பத்தினரின் விடா முயற்சியிலும் தாங்களே அதுபோன்ற வாகனத்தை உருவாக்க முடிவு செய்து தாங்கள் உருவாக்க நினைக்கும் வாகனத்தின் ப்ளூ பிரிண்ட் மாதிரியை எடுத்து காரை தயாரிக்க தயாரானார்கள்.சுமார் நான்கு வருடங்களாக சிறிய ரக காரை உருவாக்க முயற்சி எடுத்துக் கொண்டதன் பேரில் தற்போது அந்த கார் பணி முழுமையடைந்து நகர் முழுவதும் சிறிய ரக காரில் ரோஷன் உலா வருகிறார் இதுகுறித்து ரோஷன் கூறுகையில் 2016ஆம் ஆண்டு கார் கண்காட்சியில் தான் ஆசைப்பட்ட காரில் பயணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டபோது தாங்களே இது போன்ற காரை உருவாக்க நினைத்ததாகவும் பத்தாவது வகுப்பில் இந்த காரின் பணியை துவங்கினோம் நான்கு வருட முயற்சிக்குப் பின் இந்த சிறிய ரக காரை உருவாக்கியதாக தெரிவித்தார். தற்போது ஈரோடு மாவட்டத்தில் ரோபோட்டிக் மூன்றாம் ஆண்டு படித்து வருவதாகவும் இது போன்ற சிறிய ரக வாகனங்களை உருவாக்குவதில் அதிக ஆர்வம் உள்ளது இந்த சிறிய ரக கார் பல கண்காட்சிகளில் இடம் பெற்று பரிசுகளையும் வென்றுள்ளது. இந்த முறையும் ஊட்டியில் நடைபெறும் கண்காட்சியில் தாங்கள் உருவாக்கும் சிறிய ரக வாகனங்களை உருவாக்கி வெற்றி பெறுவோம் என தெரிவித்தார் கார் கண்காட்சியில் தான் ஆசைப்பட்ட காரில் வலம் வர முடியாமல் போனது தான் இப்பொழுது சிறிய ரக காரை உருவாக்கி அதில் வலம் வருவது மகிழ்ச்சி அளிப்பதாக ரோஷன் தெரிவித்தார்.

## குட்கா கடத்திய 4 பேரிடம் போலீசார் விசாரணை

ஊட்டி, மார்ச்.13-

கர்நாடக மாநிலத்திலிருந்து நீலகிரி மாவட்டத்திற்கு தனியார் ஆம்புலென்ஸை பயன்படுத்தி போதை பொருட்கள் கடத்தப்படுவது கண்டுபிடிப்பு குன்னூரை சார்ந்த 4 இளைஞர்களை பிடித்து ஊட்டி ஜி1 காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் ஹன்ஸ், பான்பராக் உள்ளிட்ட போதை பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனை உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இருந்தாலும் நீலகிரி மாவட்டத்தில் கள்ள சந்தையில் சில போதை பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**ரகசிய தகவல்**

இந்த நிலையில் கர்நாடக மாநிலம் மைசூரிலிருந்து சிலர் தடையை மீறி போதை பொருட்களை எடுத்து வருவதாக தகவல் கிடைத்தது. இதனையடுத்து ஊட்டி ஜி1 போலீசார் நேற்று முன்தினம் இரவு சந்தேகத்திற்கு உரிய தனியார் ஆம்புலன்ஸ் வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது அதில் கர்நாடக மாநிலத்திலிருந்து தடை செய்யபட்ட போதை பொருட்கள் இருந்தது கண்டு பிடிக்கபட்டது. அதில் இருந்த 700 பாக்கெட் போதை பொருட்கள் பறிமுதல் செய்த போலீசார் ஆம்புலன்ஸ் வாகனத்தையும் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று ஓட்டுனர் தப்ரேஸ்(20) மற்றும் கல்லூரி மாணவர்கள் 3 பேரையும் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் இவர்கள் கர்நாடகாவில் குறைந்த விலையில் கிடைக்கும் போதை பொருட்கள் நீலகிரி மாவட்டத்தில் பல மடங்கு விலைக்கு விற்பனை ஆவதால் ஆம்புலன்ஸ் வாகனத்தை பயன்படுத்தி தொடர்ந்து கடத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்துள்ளது.

# தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் நிர்வாகிகள் ஈவிகேஎஸ் இளங்கோவனிடம் வாழ்த்து



ஈரோடு, மார்ச் 13-

தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் 2022 தேர்தலில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட செந்தூர் ராஜகோபால் மாநகர தலைவராகவும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தலைவராக முறைம்மது தல்பீக், ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி தலைவராக சூரம்பட்டி கல்கி மற்றும் நிர்வாகிகள் 22 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இவர்கள் முன்னாள் மத்திய அமைச்சர் ஈவிகேஎஸ் இளங்கோவன் தமிழ்நாடு காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளரும் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான இ திருமகன் ஆகியோரை ஈவெரா குடியரசு இல்லத்தில் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றார்கள் இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை தலைவர் ஜெ.சுரேஷ் மாவட்ட காங்கிரஸ் ஊடகப் பிரிவு தலைவர் ம.முகமது அர்ஷத் தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் பி எம் ராஜேந்திரன், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் [illegible] பாஷா மற்றும் பலர் கலந்து கலந்து கொண்டு வெற்றிபெற்றவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

பெருந்துறையில்

# பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு கையெழுத்து பிரச்சாரம்



ஈரோடு, மார்ச்.13-

பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு கையெழுத்து பிரச்சாரம் பெருந்துறையில் நடைபெற்றது.

சமூக மேம்பாட்டு மையம், தமிழ்நாடு தோழி கூட்டமைப்பு சார்பில் "பணியிடம் முதல் பள்ளிக்கூடம் வரை உள் புகார் குழு அமைப்பது" குறித்த பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு கையெழுத்து பிரச்சாரம் பெருந்துறை பிடிஓ அலுவலகத்தில் நடைபெற்றது இந்த விழிப்புணர்வு கையெழுத்து பிரச்சார இயக்கத்தை சமநீதி சமுதாய அமைப்பாளர் தொடங்கி வைத்தார். இதில் பாலியல் வன்முறை தடுப்புச் சட்டப்படி அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் உள் புகார் குழுக்களை அமைக்க வேண்டும். இப்புகார் குழுக்களை தமிழக அரசின் சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமை துறையினர் கண்காணிக்க வேண்டும். பாலியல் வன்முறையால் பாதிக்கப்படுவோருக்கு உரிய பாதுகாப்புகளை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. இதில் தோழி கூட்டமைப்பின் ஈரோடு மாவட்ட பொறுப்பாளர் அருட்தந்தை புஷ்பநாதன், அருட்தந்தை ஜஸ்டின் சேவியர் ராஜ், பெருந்துறை ஒருங்கிணைப்பாளர்கள் ஆசாத் மற்றும் ஜோதிமணி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கணினி பயன்பாட்டு துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான நீட்டிப்புசெயல்பாடு பெருந்துறைஅரசு ஆண்கள்மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தற்போதைய சூழலில் நிலவிவரும் வேலைவாய்ப்பைப் பற்றியும் வேலைவாய்ப்பிற்காக தேவையான படிப்புகளைப் பற்றியும் பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர். பின்பு கல்லூரிசார்பில் மாணவர்களுக்குத் தேவையான எழுது பொருட்கள் மற்றும் புத்தகங்கள் பள்ளி தலைமையாசிரியர்.ரவிச்சந்திரனிடம் வழங்கப்பட்டது.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

ஈரோடு டிச.29-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டியல் துறையின் சார்பாக முன்னாள் மாணவர்களின் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட மாணவ ,மாணவியர்கள் கலந்து கொண்டனர். கல்லூரியின் தாளாளர் கே. பழனிசாமி தலைமை தாங்கினார் .கல்லூரியின் முதல்வர் முனைவர் என்.ராமன் வாழ்த்துரை வழங்கினார். கணினி பயன்பாட்டியல் துறைத்தலைவர் முனைவர் வு.யு சங்கீதா வரவேற்புரை வழங்கினார். மாணவர்கள் தங்களின் கருத்துக்களையும் .அனுபவங்களையும் ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டனர்

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி கணினி பயன்பாட்டியல் துறை, புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஈரோடு டிச 22

கொங்கு கலை அறிவியல் கல்லூரி மற்றும் நட்ஸ் டெக்னோவேஷன் பிரைவேட் லிமிடெட் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் கல்லூரியின் தாளாளர் கே.ப முனிசாமி, முனைவர். என்.ராமன், கணினி பயன்பாட்டியல் துறைத்தலைவர் முனைவர் டி எ சங்கிதா மற்றும் நட்ஸ் டெக்னோவேஷன் தலைமை நிர்வாக அதிகாரி கௌதம் கிருஷ்ணமூர்த்தி, தலைமை நிதி அதிகாரிஆர். சி கனிஷ்க் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இதன் மூலமாக மாணவர்களுக்கு தொழில்நுட்ப பயிற்சி வழங்குதல், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறை மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் ஆகியவை புரிந்துணர்வின் நோக்கமாகும்.

DINABOOMI

**PUBLICITY:** BCA SEMINAR ON OPEN SOURCE P0ROGRAMMING

## கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கருத்தரங்கு

ஈரோடு: ஆக.26-

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டு துறையின் சார்பில் திறந்த மூல நிரலாக்க ஒரு நாள் கருத்தரங்கு நான்கு நாட்கள் முன்பு இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பி சி ஏ மாணவர்களுக்காக நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர் கே பழனிசாமி தலைமை தாங்கினார் மற்றும் முதல்வர் என் ராமன் வாழ்த்துரை வழங்கினார். கணினி பயன்பாட்டு துறைத் தலைவர் முனைவர் டி ஏ சங்கீதா வரவேற்புரை வழங்கினார். இந்தப் கருத்தரங்கில் ஹிந்துஸ்தான் கலை கல்லூரியின் பேராசிரியர் முனைவர் என் ரேவதி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அவர் பி.எச்.பி பைத்தான் மற்றும் திறந்த மூல நிரலாக்கத்தை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வருங்காலத்தில் ஐடி தொழில் முனைவோருக்கு திறந்த மூல நிரலாக்கம் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று கூறினார். இதில் 170 மாணவர்களுக்கு மேல் பங்கேற்றார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கணினி பண்பாட்டுத் துறையின் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

Programme Date : 19.8.21

# கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் கணினி பயன்பாட்டியல் துறை, புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஈரோடு டிச 23-

கொங்கு கலை அறிவியல் கல்லூரி மற்றும் கொங்கு பொறியியல் கல்லூரி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில் கொங்கு பொறியியல் கல்லூரியின் தாளாளர் பி சச்சிதானந்தம் முதல்வர் டாக்டர் வி பாலுசாமி தகவல் தொழில்நுட்பத் துறையின் தலைவர் டாக்டர் ஆர் தங்கராஜன் மற்றும் கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தாளாளர் கே பழனிசாமி முதல்வர் டாக்டர் என் ராமன் கணினி பயன்பாட்டு துறைத்தலைவர் டாக்டர் டி. ஏ சங்கீதா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இதன் மூலமாக மாணவர்களுக்கு பயிற்சி வழங்குதல், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் ஆகியவை புரிந்துணர்வின் நோக்கமாகும்

**Seminar on CrowdSourcing – Institution's Innovation Council on 24th November, 2021**

# கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கருத்தரங்கு

ஈரோடு,டிச.01-

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி) கணினி பயன்பாட்டு துறை மற்றும் இன்ஸ்டியூசன்ஸ் இனோ வேன் கவுன்சில் சார்பில் (க்ரவுட்சோர்சிங் - புதுமையான கண் ணோட்டத்தில்) என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு பிசிஏ மாணவர்களுக்கு நடைபெற்றது. கருத்தராங்கில் கல்லூரியின் தாளாளர்.கே.பழனிசாமி தலைமை தாங்கினார். முதல்வர் என். ராமன் வாழ்த்துரை வழங்கினார். கணினி பயன்பாட்டு துறைத் தலைவர் டி.ஏ.சங்கீதா வரவேற்புரை வழங்கினார். கருத்தரங் கில் அறிஞர் அண்ணா அரசு கலை கல்லூரி கணினி அறிவி யல் துறையில் பணிபுரியும் ஈ.டி.வெங்கடேசன் சிறப்பு விருந் தினராக பங்கேற்று மாணவர்களுக்கு க்ரவுட்சோர்சிங் பற்றிய விழிப்புணர்வும் அதன் பயன்கள் பற்றியும் மேலும் அதில் உள்ள புதுமைகள் மற்றும் வேலை வாய்ப்பு பற்றியும் இக்க ருத்தரங்கு மூலமாக எடுத்து உரைத்தார். இதில் 110 மாணவர் களுக்கு மேல் பங்கேற்றார்கள். ஏற்பாட்டினை கணினி பயன் பாட்டுத் துறையின் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

ஈரோடு டிச.29-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டியல் துறையின் சார்பாகன்னாள் மாணவர்களின் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட மாணவ ,மாணவியர்கள் கலந்து கொண்டனர். கல்லூரியின் தாளாளர் கே. பழனிசாமி தலைமை தாங்கினார் .கல்லூரியின் முதல்வர் முனைவர் என்.ராமன் வாழ்த்துரை வழங்கினார். கணினி பயன்பாட்டியல் துறைத்தலைவர் முனைவர் வு.யு சங்கீதா வரவேற்புரை வழங்கினார். மாணவர்கள் தங்களின் கருத்துக்களையும் ,அனுபவங்களையும் ஆர்வத்துடன் பகிர்ந்து கொண்டனர்

# கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிற்சிப் பட்டறை




ஈரோடு ஆக.05-

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டு துறையின் சார்பில் கைபேசி செயலிகள் உருவாக்கம் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை பி சி ஏ மாணவர்களுக்காக நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர் கே பழனிசாமி தலைமை தாங்கினார் மற்றும் முதல்வர் என் ராமன் வாழ்த்துரை வழங்கினார். கணினி பயன்பாட்டு துறைத்தலைவர் முனைவர சங்கீதா வரவேற்புரை வழங்கினார். இந்த பயிற்சிப்பட்டறை கொங்கு பொறியியல் கல்லூரி தகவல் தொழில்நுட்பத்துறையில் பணிபுரியும் உதவி பேராசிரியர்கள் முனைவர் கே ஆர் பிரசன்ன குமார் கே லோகேஸ்வரன் பி பொன்செல்வகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவர்களுக்கு ஆண்ட்ராய்ட் செயலி பற்றிய விழிப்புணர்வும் அதன் பயன்கள் பற்றியும் மேலும் எளிய முறையில் ஆண்ட்ராய்டு செயலியை எவ்வாறு உருவாக்குவது குறித்தும் இந்த பயிற்சி பட்டறையில் மாணவர்களுக்கு செய்முறை பயிற்சி அளித்தனர். இதில் 130 மாணவர்களுக்கு மேல் பங்கேற்றார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கணினி பண்பாட்டுத் துறையின் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.



ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட சோலார் பகுதியில் தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பது குறித்த இடத்தினை அமைச்சர் முத்துசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் விஜயகுமார், ரவிச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டத்தில் தூய்மை பாரத இயக்க விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை கலெக்டர் கிருஷ்ணனுண்ணி கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட கூடுதல் ஆட்சியர் பிரதிநிதி தாசன், உதவி திட்ட அலுவலர் குமார் ஆகியோர் உள்ளனர்.



அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு அருந்ததியர் விடுதலை இயக்கத்தின் மாநிலத் தலைவர் சாமிநாதன் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் ஜனநாயக மக்கள் கழகத்தின் மாநில தலைவர் ஆறுமுக கண்ணன் மாநில துணை தலைவர் ஏஎல் முனியாண்டி, அருந்ததியர் விடுதலை இயக்கத்தின் இளைஞரணி செயலாளர் கார்த்திக் கலந்து கொண்டனர்.

# சமுதாய வளைகாப்பு விழாவில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சீர்வரிசை பொருட்கள்: அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்



கோவை,செப்.17-

கோயம்புத்தூர் மாவட்டம் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத் துறையின் சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீர்வரிசை பொருட்களை வழங்கி சமுதாய வளைகாப்பு விழாவை தொடங்கி வைத்தார்.

கோயம்புத்தூர் மாவட்டம் பீளமேடு கண்டியப்பன் சமூக கூடத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்துறையின் சார்பில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீர்வரிசை பொருட்களை வழங்கி சமுதாய வளைகாப்பு விழாவை தொடங்கி வைத்தார். இவ்விழாவில்கலெக்டர் ஜி.எஸ்.சமீரன் மாநகராட்சி ஆணையாளர் ராஜகோபால் சுன்கரா ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் மீனாட்சி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர் பின்னர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவிக்கையில்

தமிழ்நாடு அரசு பெண்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் முதலமைச்சராக பொறுப் பேற்றவுடன் கையொழுத்திட்ட மிக முக்கியமான திட்டங்களில் ஒன்று நகர பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயணம் தற்போது சட்டப்பேரவை கூட்டத்தொடரில் வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 40சதவீதம் முன்னுரிமை வழங்கப்படும் அறிவித்துள்ளார்கள். கருவுற்ற காலங்களில் ஏற்படுகின்ற வருவாய் இழப்பினை ஈடு செய்திடும் பொருட்டு கர்ப்பிணித் தாய்மார்கள் நல்ல சத்தான உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்துப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கர்ப்பகால முன்பராமரிப்பு ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி அளித்தல் வாழ்க்கை கல்வி அளித்தல் இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் வழங்குதல் ஆரம்ப சுகாதார மையத்திற்கு மேல் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்புதல் போன்ற பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு குழந்தையின் வளர்ச்சி கருவாக உருவான நாளிலிருந்தே ஆரம்பமாகிறது. இதனை மனதிற்கொண்டு கர்ப்பிணி பெண்கள் கர்ப்ப காலத்தில் மகிழ்ச்சியாகவும் இருந்தால் தான் அவர்களுக்கு பிறக்கும் குழந்தை ஆரோக்கியமான அறிவான குழந்தையாக இருக்கும் என்றதற்காக ஏற்படுத்தப்பட்ட வளைகாப்பு நிகழ்ச்சி அறிவியல் பூர்வமான நிகழ்ச்சியாகும். வசதி வாய்ப்பு குறைவால் இந்த நிகழ்ச்சியை நடத்த முடியாத குடும்பத்தில் உள்ள கர்ப்பிணிகளுக்கு இந்த வாய்ப்பும் நன்மையும் கிடைக்காமல் அவர்களின் குழந்தைகள் பாதிக்கப்படக்கூடாது என்ற தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பான திட்டம் இந்த சமுதாய வளைகாப்பு திட்டமாகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள 18 வட்டாரங்களில் மேற்பார்வையாளர்களின் தொகுதிகளான 48 தொகுதிகளில் சமுதாய வளைகாப்பு நடைபெறுகின்றது. ஒவ்வொரு தொகுதிகளிலும் 50 கர்ப்பிணி பெண்கள் விதம் 48 மேற்பார்வையாளர்களின் தொகுதிகளிலும் 2400 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நடைபெறுகின்றது. இவ்விழாவில் ஒவ்வொரு கர்ப்பிணி பெண்களுக்கும் சீர்வரிசையாக மஞ்சள் குங்குமம் பூ வளையல் பழங்கள் இனிப்புகள் மற்றும் ஐந்து வகை சாதங்கள் வழங்கப்படுகின்றது. மேலும் அவர்களுக்கு கர்ப்ப காலத்தின் முக்கியத்துவம் 1000 நாட்களின் தங்கமான ஆயிரம் நாட்கள், பாதுகாப்பான பிரசவம் கர்ப்ப காலத்தில் உண்ணவேண்டிய சத்தான உணவுகள் தடுப்பூசி மருத்துவ பரிசோதனை மருத்துவமனையில் சென்று பிரசவம் பார்த்தல் சீம்பால் மற்றும் தாய்ப்பாலின் மகத்துவம் பாரம்பரிய உணவு குறித்த விழிப்புணர்வு வழங்கப்படுகின்றது. இன்று சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ள அனைத்து கர்ப்பிணி தாய்மார்களும் நலமுடன் குழந்தைகளை பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளின் காரணமாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்றுப் பரவல் வெகுவாக குறைந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிப்பதற்கு இ.எஸ்.ஐ மருத்துவமனை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பொள்ளாச்சி அரசு மருத்துவமனை மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை உள்ளிட்ட 11 அரசு மருத்துவமனைகளில் 1825 ஆக்சிஜன் படுக்கை வசதிகளும் 391 சாதாரண படுக்கைகளும் என 3850 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 108 தனியார் மருத்துவமனைகளில் 1969 சாதாரண படுக்கைகளும் 2472 ஆக்சிஜன் படுக்கைகளும் கொரோனா தொற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதுபோலவே மாவட்ட நிர்வாகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள 16 கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்களில் 3850 சாதாரண படுக்கைகளும் 465 ஆக்சிஜன் படுக்கை வசதிகளும் உள்ளது. கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்கும் 108 தனியார் மருத்துவமனைகளில்சாதாரண படுக்கைகள் 2256 ஆக்சிஜன் படுக்கைகள் 2966 தீவிர சிகிச்சை படுக்கைகள் 510 என மொத்தம் 5732 படுக்கை வசதிகள் உள்ளன. தனியார் மருத்துவமனையின் கீழ் இயங்கும் 13 தற்காலிக கொரோனா தொற்று சிகிச்சை மையங்களில் 690 படுக்கை வசதிகள் உள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதுவரை முதல் தவணை தடுப்பூசி 1360046 நபர்களுக்கும் இரண்டாம் தவணை தடுப்பூசி 449092 நபர்களுக்கு என மொத்தம் 1809138 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பாக நேற்று மட்டும் 19990 நபர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது கடந்த 12.09.2021 அன்று முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி நடைபெற்ற மெகா தடுப்பூசி முகாம் மூலம் அன்று ஒரு நாள் மட்டும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1475 முகாம்கள் அமைக்கப்பட்டு 151485 நபர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டது. மேலும் தேவைப்படும் அனைவரும் எளிதில் தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசு மருத்துவமனைகளில் 24x7 தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது.

மேலும் வருகின்ற 19.09.2021 அன்று மாவட்ட முழுவதும் மெகா தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது. இதுவரையில் முதல் தவணை தடுப்பூசி செலுத்தாதவர்களும் தற்போது இரண்டாம் தவணைக்காக காத்திருப்போர்களும் இம்முகாமில் கலந்து கொண்டு தடுப்பூசி செலுத்தி பயன்பெறலாம் என உணவு மற்றும் உணவுப்பொருள்வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

## பெருந்துறையில் அண்ணா பிறந்தநாள் விழா

# எஸ்.ஜெயக்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை



ஈரோடு செப்.17-

பேரறிஞர் அண்ணாவின் 113 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பெருந்துறை உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார் தலைமையில் கட்சி நிர்வாகிகளும் அண்ணா தொழிற்சங்க உறுப்பினர்களும் கழகத்தினரும் திரளாக கலந்துகொண்டு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இந்த விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பொன்னுசாமி கே.எஸ். பழனிச்சாமி பொன்னுத்துரை வேளாண் கூட்டுறவு வங்கி தலைவரும் பெருந்துறை ஒன்றிய கழகச் செயலாளருமான விஜயன் என்கிற ராமசாமி, ஊத்துக்குளி ஒன்றிய கழக செயலாளர் ரவிச்சந்திரன், பெருந்துறை ஒன்றிய சேர்மன் சாந்தி ஜெயராஜ்,கழக பேரூர் செயலாளர்கள் பெருந்துறை கல்யாணசுந்தரம், கருமாண்டி செல்லிபாளையம் பழனிச்சாமி, பெத்தாம்பாளையம் பெரியசாமி, நல்லாம்பட்டி துரைசாமி, பள்ளபாளையம் கமலக்கண்ணன், காஞ்சிகோவில் சித்தப்பன், குன்னத்தூர் அப்பாச்சாமி,வேளாண் கூட்டுறவு வங்கி துணைத் தலைவர் டி.டி.ஜெகதீஷ், பெருந்துறை யூனியன் துணை தலைவர் உமா மகேஸ்வரன், முன்னாள் தொகுதிக் கழகச் செயலாளர் திங்களூர் கந்தசாமி, எம்ஜிஆர் மன்ற தலைவர் ஏகே சாமிநாதன்,முன்னாள் யூனியன் துணைசேர்மன் ஒ.ஆர் பழனிச்சாமி, அம்மா பேரவை இணைச் செயலாளர் அப்புகுட்டி மாவட்ட இலக்கிய அணி தலைவர் அருள்ஜோதி செல்வராஜ், இளைஞரணி ஒன்றிய செயலாளர் வைகை தம்பி என்கின்ற ரஞ்சித் ராஜ், ஒன்றிய இளைஞரணி துணை செயலாளர் பெட்டிஷன் மணி, வேட்டுவபாளையம் அருணாச்சலம், அண்ணா தொழிற்சங்கம் வடிவேல், அய்யப்பன்,வார்டு செயலாளர்கள் சிவகுமார், டைலர் ரவி, குணசேகரன், சென்னிமலை ஒன்றியக்குழு உறுப்பினர் ராதிகா ராமசாமி, பெருந்துறை ஒன்றிய குழு உறுப்பினர் ரெட்டி பழனிசாமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் வாய்ப்பாடி இருளப்பமூர்த்தி, கருத்தம்பாளையம் கப்பிரமணி, சீனாபுரம் ஜெயக்கொடி, தங்கமுத்து, கே.பி.எஸ் மணி,கருமாண்டம்பட்டி சம்மேளன துணைத் தலைவர் ராஜேந்திரன், சக்தி ராசு, பணியம்பள்ளி ரவி, பெத்தாம்பாளையம் கோபால்,காடபாளையம் கோபால், சம்பத், சங்கர், கந்தம்பாடை புதூர் மணி, பாலன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற தொழிற் சங்க உறுப்பினர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், அண்ணா தொழிற்சங்க ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குனராக மருத்துவர்.எ.செந்தமிழ் செல்வி பொறுப்பேற்றுக்கொண்டார்.

# கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இணைய பாதுகாப்பு குறித்த கருத்தரங்கு

ஈரோடு செப் 17-

கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டு துறையின் சார்பில் இணைய பாதுகாப்பு சைபர் செக்யூரிட்டி என்னும் தலைப்பில் ஒரு நாள் இணைய வழி கருத்தரங்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பி சி ஏ மாணவர்களுக்காக நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர். கே பழனிசாமி தலைமை தாங்கினார் மற்றும் முதல்வர் என். ராமன் வாழ்த்துரை வழங்கினார் கணினி பயன்பாட்டு துறைத்தலைவர் முனைவர் எம் சங்கீதா வரவேற்புரை வழங்கினார் இந்த கருத்தரங்கில் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியின் பேராசிரியர் டி.குகன் சிறப்புரை ஆற்றினார் இன்றைய காலச் சூழ்நிலையில் இணைய வழியில் நடைபெறும் தகவல் திருட்டு பற்றியும் அதை தடுக்கும் வழிமுறைகள் குறித்தும் கூறினார். பெரிய நிறுவனங்கள் முதல் தனி நபர் தகவல்கள் வரை சைபர் தாக்குதல்களுக்கு ஆளாகி தகவல்கள் திருடப்படுகிறது. இணைய வழிக் குற்றங்களில் இருந்து நம்தகவல்களை பாதுகாக்க சைபர் செக்யூரிட்டி பயன்படுகிறது என தெரிவித்தார். மேலும் சைபர் செக்யூரிட்டி துறையில் உள்ள படிப்புகள் எதிர்காலம் குறித்தும் வேலைவாய்ப்புகள் குறித்தும் விவரித்தார். இதில் 160 மாணவர்களுக்கு மேல் பங்கேற்று சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கணினி பயன்பாட்டுத் துறையின் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# பெருந்துறை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சக்தி மசாலா நிறுவனம் சார்பில் ரூ.2 கோடி நிதி உதவி



ஈரோடு செப் 17:

பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 69 ஆயிரத்து 200 சதுரஅடி பரப்பளவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு உள்ளது. ஈரோடு மாவட்ட ரோட்டரி சங்கங்கள் மற்றும் பல்வேறு சேவை சங்கங்கள் தொழில் நிறுவனங்கள் பங்களிப்புடன் 14.5 கோடி ரூபாய் மதிப்பில் மூன்று தளங்களுடன் 401 படுக்கைகள் கொண்ட கட்டிடம் நவீன தொழில்நுட்பத்துடன் கட்டிடம் கட்டப்பட்டது. இதற்கான பங்களிப்பாக சக்தி மசாலா நிறுவனம் சார்பில் ரூ.2 கோடிக்கான காசோலை, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வீட்டு வசதி த்துறை அமைச்சர் சு. முத்துசாமியிடம் வழங்கினார். நிகழ்ச்சியில் சக்தி மசாலா நிறுவனங்களின் சேர்மன் பி.சி.துரைசாமி, சாந்தி துரைசாமி, செந்தில் குமார், ரோட்டரி சங்கங்கள் முன்னாள் தலைவர் சகாதேவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பழங்குடியின குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மரக்கன்றுகள் நடும் விழா

ஊட்டி, செப்.17-

பழங்குடியின குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மரக்கன்றுகள் நடும் விழா ஊட்டிக் மட்டத்தில் நடைபெற்றது இதுகுறித்து பகல் கோடு மந்து சூழல் மேம்பாட்டு தலைவர் நோர்தே குட்டன் தெரிவித்ததாவது.

பகல்கோடுமந்து சூழல் மேம்பாட்டு குழுவில் இயற்கையை மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த குழுவானது வனதுறையுடன் இணைந்து பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்க வழி வகை செய்து வருகின்றது. இங்கு பணியாற்றுபவர்கள் தோடர் பழங்குடியினர் மக்கள்.

தோடர் பாரம்பரிய முறைப்படி இயற்கையை தெய்வமாக வழிபடுபவர்கள். சோலை மரங்கள் அவர்களுடைய பிறப்பு முதல் இறப்பு வரை மற்றும் இறந்த பிறகு கூட அவர்களின் கலாச்சார சடங்குகள் செய்வதற்கு மிகமுக்கியமானது. மற்றும் மூலிகை வைத்தியம் செய்யவும், கோவிலில் உணவு உட்கொள்ளவும், மோர் குடிக்கவும், தினசரி சாஸ்த்திரங்கள் செய்யவும் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றது . இப்படிப்பட்ட மரங்கள் புதிதாக வளர்க்க சோலை மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றது.

ஆனால் இந்த சூழல் மேம்பாட்டு குழுவில் அருகில் உள்ள கிராமங்களில் உள்ள பழங்குடி குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அவர்களின் கைகளால் மர கன்றுகள் நடவு செய்யப்படுகின்றது. இதனால் குழந்தைகள் மிகவும் ஆர்வமுடன் தினந்தோறும் தாங்கள் நடவுசெய்த செடிகளை பார்வையிடுவதும் தண்ணீர் ஊற்றியும் மகிழ்கின்றனர். நாம் நடவுசெய்யும் இந்த மரக்கன்றுகள் அடுத்த தலைமுறையினருக்கு தான் அந்த தலைமுறையினர் ஆர்வத்துடன் செயல்பட்டால் கண்டிப்பாக வனவளமும் சுற்றுச் சூழலும் கண்டிப்பாக பாதுகாக்கப்படும். இதற்கான முயற்சியில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

பகல்கோடு மந்து சூழல் மேம்பாட்டு குழுவில் தலைவர் நோர்தே குட்டன் தலைமையிலும் பைகாரா வன சரக அலுவலர் பாண்டி ராஜ் அவர்களின் முழு ஒத்துழைப்பு மூலம் மாவட்ட வனஅலுவலரின் அறிவுரையின்படி பழங்குடியின பணியாளர்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கண்டிப்பாக இனிவரும் காலங்களில் இந்த இடமானது சோலை மரங்கள் சூழ்ந்த அழகிய புல்வெளிகளாக மாறும் அதற்காக பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது என்றார்.

நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில்


## ரூ. 4.62 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள்

கலெக்டர் ஜெஇன்னசென்ட் திவ்யா நேரில் ஆய்வு



## கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திரோனிக்ஸ் அசோசியேஷன் தொடக்க விழா

ஈரோடு செப் 16-






தமிழக மக்கள் முன்னேற்ற கழக ஈரோடு மாவட்ட தலைவர் ... அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.







## புதிய நீதிக்கட்சி சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



ஈரோடு, செப் 16-

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில்

## ரூ.3.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்

செய்தியாளர்களுடன் சென்று கலெக்டர் எஸ்.வினீத் ஆய்வு



திருப்பூர் செப் 16-

## ஈரோடு மாநகர் மாவட்ட அ.தி.மு.க சார்பில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



ஈரோடு, செப் 16

## விழிப்புணர்வு பிரச்சார தூய்மை ரதம்: மாவட்ட வருவாய் அலுவலர் லீலா அலெக்ஸ் தொடங்கி வைத்தார்

கோவை, செப் 17-

DINABOOMI

PUBLICITY: GUEST LECTURE ON SSOFTWARE PROJECT MANAGEMENT

# கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கணினி பயன்பாட்டு துறை விருந்தினர் விரிவுரை

ஈரோடு ஆக 28-

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டு துறையின் சார்பில் மென்பொருள் திட்ட மேலாண்மை ஒரு நாள் கெஸ்ட் லெக்சர் 24.08.2021 அன்று மூன்றாம் ஆண்டு பி சி ஏ மாணவர்களுக்காக நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர் கே பழனிசாமி தலைமை தாங்கினார் மற்றும் முதல்வர் டாக்டர் என் ராமன் வாழ்த்துரை வழங்கினார். கணினி பயன்பாட்டு துறைத்தலைவர் முனைவர் எம் சங்கீதர் வரவேற்புரை வழங்கினார். இந்த விருந்தினர் விரிவுரையில் இன்போசிஸ் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரியும் சங்கவின் சுந்தரசாமி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அவர் மென்பொருள் மேம்பாடு மென்பொருள் சோதனை மற்றும் நேர்முகத்தேர்வில் எளிதில் வெற்றி பெறுவது பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இதில் 110 மாணவர்களுக்கு மேல் பங்கேற்றார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கணினி பண்பாட்டுத் துறையின் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

DINABOOMI

**PUBLICITY:** **BCA SEMINAR ON OPEN SOURCE P0ROGRAMMING**

## கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கருத்தரங்கு

**ஈரோடு:ஆக26-**

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டு துறையின் சார்பில் திறந்த மூல நிரலாக்க ஒரு நாள் கருத்தரங்கு நான்கு நாட்கள் முன்பு இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பி சி ஏ மாணவர்களுக்காக நடைபெற்றது. கல்லூரியின் தாளாளர் கே பழனிசாமி தலைமை தாங்கினார் மற்றும் முதல்வர் என் ராமன் வாழ்த்துரை வழங்கினார். கணினி பயன்பாட்டு துறைத் தலைவர் முனைவர் டி ஏ சங்கீதா வரவேற்புரை வழங்கினார். இந்தப் கருத்தரங்கில் ஹிந்துஸ்தான் கலை கல்லூரியின் பேராசிரியர் முனைவர் என் ரேவதி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அவர் பி.எச்.பி பைத்தான் மற்றும் திறந்த மூல நிரலாக்கத்தை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வருங்காலத்தில் ஐடி தொழில் முனைவோருக்கு திறந்த மூல நிரலாக்கம் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று கூறினார். இதில் 170 மாணவர்களுக்கு மேல் பங்கேற்றார்கள். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை கணினி பண்பாட்டுத் துறையின் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

Programme Date: 19.8.21

தினமணி

வியாழக்கிழமை, 4 மார்ச் 2021

# தொழில்முனைவோர் விருதுக்கான போட்டி: கொங்கு கல்லூரி மாணவர் சிறப்பிடம்



மாணவருக்கு வாழ்த்து தெரிவிக்கிறார் கொங்கு கலை, அறிவியல் கல்லூரித் தாளாளர் கே.பழனிசாமி.

ஈரோடு, மார்ச் 3: உலகளாவிய மாணவர் தொழில் முனைவோர் விருதுக்கான போட்டியில் ஈரோடு கொங்கு கலை, அறிவியல் கல்லூரி மாணவர் தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கொங்கு கலை, அறிவியல் கல்லூரியின் கணினி பயன்பாட்டுத் துறை மூன்றாம் ஆண்டு மாணவர் எஸ்.சிவபிரகாஷ். இவர் கல்லூரி அறிவியல் மன்றத்தின் மாணவ உறுப்பினராகவும் உள்ளார். இவர் மாணவர் தொழில் முனைவோர் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட உலகளாவிய மாணவர் தொழில் முனைவோர் விருதுக்கான போட்டியில் தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். தொழில் முனைவோருக்கான அவருடைய சிறந்த திட்ட அறிக்கைக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

நாக்பூரில் நடைபெற்ற தேசிய அரையிறுதிப் போட்டியில் பங்கேற்ற 28 பேரில் முதல் 5 மாணவர்களில் ஒருவராக சிவபிரகாஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் நடத்தப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய மாணவர் தொழில் முனைவோர் விருதுக்கான இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்.

மாணவர் சிவபிரகாஷைப் பாராட்டி, கல்லூரித் தாளாளர் கே.பழனிசாமி, முதல்வர் என்.ராமன், கல்லூரியின் அறிவியல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஏ.கே.வித்யா, கணினி பயன்பாட்டுத் துறைத் தலைவர் கிருஷ்ணவேணி, பேராசிரியர்கள், மாணவர்கள் பாராட்டினர்.